[20th November 1963

Ayyankottai village (inclusion in panchayats)

* 325 Q.—SRI K. MOOKIAH THEVAR: Will the Hon. the Minister for Local Administrotion be pleased to state—

(*a*) whether it is a fact that Ayyankottai village of Ayyanpalayam firka, Madurai district, has not yet been merged with any of the panchayats; and

(*b*) whether there is any proposal to form separate panchayat board for this village?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் :

(அ) ஆம்

(இ) இல்லே.

மதிய உணவுத் திட்டம்

* 326 கேள்வி.—திரு. முனு ஆதி : கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதிய உணவுத் திட்டத்தின் கீழ் உணவு கொடுப்பதை காண்டிராக்ட்டு விடுவதில் சர்க்கார் அனுசரிக்கும் நடைமுறைக் கொள்கை என்ன ?

(இ) ஒருவருக்கு மூன்ருண்டுகள் வரைத்தான் காண்டிராட்டு விடவேண்டும் என்று உத்தரவு ஏதேனும் உள்ளதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : (அ) கண்டிராக்டர்கள் மூலம் உணவு வழங்கக்கூடாது என அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

(இ) கேள்வி எழாது.

(*a*) The Government have ordered that the supply of Midday Meals should not be made through contractors.

(*b*) Does not arise.

* 327 கேள்வி.—திரு. முனு ஆதி : கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தற்போதுள்ள மதிய உணவுத் திட்டத்தை அமுல் நடத்தும் பள்ளிகளுக்கு அந்த வட்டார பஞ்சாயத்து சபைகள் குறைந்தது 2 ந. பை. பிரதி மாணவனுக்கு நாளொன்றுக்கு என்ற அடிப்படையில் நன்கொடை ஒதுக்குதல் வேண்டும் என அரசாங்கம் உத்தரவு பிறப்பித்துள்ளதா ?

(இ) ஆம் எனில், சில பஞ்சாயத்துக்களில் 3 ந.பை. 4 ந.பை.-வும் சிலவற்றில் 2 ந.பை. மட்டுமே கொடுக்கப்பட்டு வருவதை அரசாங்கம் அறியுமா ?

(உ) இத்தகைய மாறுபாடுகளை நீக்க அரசாங்கம் எடுக்க உத்தேசித்துள்ள திட்டமென்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : (அ), (இ) & (உ) பஞ்சாயத்துக்கள் மதிய உணவுத் திட்டத்திற்கென ஒவ்வொரு பிள்ளைக்கும் ஒரு சாப்பாட்டுக்கு 2 நயா பைசா வீதம் பஞ்சாயத்து நிதிகளிலிருந்து